மேலும் ஆரோக்கியமான பிரென்ட்டை அமைக்க எங்கள் கூட்டாளர்களுடன் பணிபுரிகிறோம்

**www.brentpct.nhs.uk**

Brent Primary Care Trust

Wembley Centre for Health & Care

116 Chaplin Road

Wembley

Middlesex

HA0 4UZ

மின்னஞ்சல்: jo.ohlson@brentpct.nhs.uk

அன்புள்ள வசிப்பாளருக்கு,

**பொருள்: நீங்கள் ஒரு உள்ளூர் மருத்துவரிடம் (பொது மருத்துவரிடம்) பதிவு செய்துகொள்ளுதல்**

நீங்கள் இப்போதும் உங்கள் Brent GP Practiceஇல் நோயாளியாக இருக்கிறீர்கள் என்று உறுதிப்படுத்தக் கோரி NHS Brent உங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பியது. இந்தக் கோரிக்கையை அடுத்து நாங்களும் மேற்கொண்டு ஒரு கடிதம் அனுப்பினோம். உங்களிடமிருந்து எங்களுக்கு எந்த பதிலும் வராததால், **நீங்கள் இனிமேல் உங்கள் பிரென்ட் பொது மருத்துவரிடம் பதிவு பெற்றவராக இருக்க மாட்டீர்கள்** என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

பிரென்ட் நகராட்சியில் வசிப்பவர்கள் தவறாமல் ஒரு பொது மருத்துவரிடம் பதிவு செய்துகொள்ளும்படி நாங்கள் ஊக்குவிக்கிறோம். உங்களுக்கு உடல்நலம் சரியில்லாதபோது, கர்ப்பத்திற்கு அல்லது நீரிழிவு நோய், ஆஸ்துமா போன்ற எந்த நீண்டகால நிலைக்கும் தொடர்ந்து கவனிப்பு பெறுவதற்கு, அல்லது நோய்கள் இருப்பதைக் கண்டறியும் சோதனைகள் போன்றவற்றுக்காக, அல்லது குழந்தைக்குத் தடுப்பு மருந்து அளிக்க நீங்கள் செல்லும் இடம்தான் உங்கள் பொது மருத்துவர் சிகிச்சையகம்.

ஒரு பொது மருத்துவரிடம் பதிவு செய்துகொள்வது எளிது; இதற்குச் சிறிதும் பணம் செலவாகாது. நீங்கள் விரும்பினால், உங்கள் பழைய பொது மருத்துவர் சிகிச்சையகத்தில்

மீண்டும் பதிவு செய்துகொள்ளவும் முடியும். இந்த மீள்பதிவை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் செய்ய முடியும்.

நீங்கள் முன்பு பதிவு செய்துகொண்ட அதே சிகிச்சையகத்தில் மீண்டும் பதிவு செய்துகொள்ள விரும்பினால், நீங்கள் அந்த சிகிச்சையகத்திற்குச் சென்று ஒரு பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும்.

நீங்கள் வேறொரு சிகிச்சையகத்தில் பதிவு செய்துகொள்ள விரும்பினால், அந்த சிகிச்சையகத்தின் அணுகுவட்டாரத்திற்குள் வசிக்கிறீர்களா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். www.nhs.uk என்ற வலைத்தளத்தில் NHS Choices (NHS தேர்வுகள்) என்பதில் பார்ப்பதன் மூலம் அல்லது பதிவுக் குழுவை 020 8427 7888 என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் செய்யலாம்.

நீங்கள் பிரெண்ட் நகராட்சியை விட்டுச் சென்றுவிட்டீர்கள், நீங்கள் முன்பே ஒரு சிகிச்சையகத்தில் பதிவு பெற்றிருக்கிறீர்கள் எனில் அல்லது நீங்கள் தற்காலிகமாகத்தான் (மூன்று மாதங்களுக்குக் குறைவாக) பிரிட்டனில் இருப்பீர்கள் எனில் நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம்.

இந்தக் கடிதம் அல்லது உங்கள் பதிவு தொடர்பாக நீங்கள் ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டும் எனில், பதிவுக் குழுவை 020 8427 7888 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் உண்மையுள்ள,



**ஜோ ஆல்சன்**

**பிரெண்ட் நகராட்சி இயக்குநர்**

**NHS Brent**